**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය**

**Sri Lanka Export Development Board**


# 2017ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் 2017ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், ஏக முகவர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அதிகாரம் விற்பனையாளர்கள், மொத்த விற்பனை நிறுவனங்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **1.** | **அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள்** |
| 1.1 | அலுவலக காகிதாதிகள் (பேனைகள், பென்சில்கள், கடித உறைகள், ஸ்டெபள், தட்டச்சுத் தாள்கள், புகைப்படப் பிரதி தாள்கள் மற்றும் டஸ்டர்கள் போன்றன) |
| 1.2 | அலுவலக உபகரணங்கள் (கல்குலேட்டர்கள், தொலைநகல் இயந்திரம், புகைப்பட பிரதி இயந்திரம், வரவு பதிவு இயந்திரம் (முகம் மற்றும் விரல் பதிவு) மற்றும் ஏனைய விபரங்கள் போன்றன) |
| 1.3 | கணனி மற்றும் கணனி துணைப்பொருட்கள் (யூபிஎஸ், மவுஸ், கீ போர்ட் போன்றன) |
| 1.4 | அச்சுப் பொறிகள் மற்றும் அச்சுப்பொறி துணைப்பொருட்கள் (டொட்மெட்ரிக், லேசர் ஜெட் பிரின்டர், கலர் பிரின்டர் மற்றும் போட்டோ கன்டக்டர் போன்றன) |
| 1.5 | கணனி பாவனைப் பொருட்கள் (பிரின்டர், டோனர், காட்ரிச்சுகள், ரிபன், பென் டிரைவ், சீடீக்கள், டீவீடீக்கள், டிஸ்கெட்டுகள் போன்றன) |
| 1.6 | அலுவலகத் தளபாடங்கள் - மரம் மற்றும் உருக்கு (கபர்ட், அலுமாரி ராக்கை (Shelves) மேசைகள், கதிரைகள் போன்றன) |
| 1.7 | மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறிகள், காற்றுச்சீராக்கிகள் போன்றன) |
| 1.8 | கட்புல, செவிப்புல உபகரணங்கள் மற்றும் தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் (கமரா, வீடியோ கமரா, புரஜெக்டர் மற்றும் புரொசஸிங் இயந்திரம், தொலைபேசி முறைமை மற்றும் தொலைபேசி துணைப்பாகங்கள் போன்றன) |
| 1.9 | திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள், பெயர்ப் பலகைகள் (அலுமினியம் / பிளாஸ்டிக், பித்தளை போன்றன) |
| 1.10 | அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| 1.11 | சீருடைத் துணிகள் (மேற்சட்டைத் துணிகள், காற்சட்டைத் துணிகள், காலணிகள் மற்றும் காலுறைகள்) |
| **2.** | **அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்** |
| 2.1 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு (தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், வரவு பதிவு இயந்திரம் (முகம் மற்றும் விரல் பதிவு) மற்றும் ஏனைய உபகரணங்கள்) |
| 2.2 | காற்றுச்சீராக்கி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 2.3 | கணனிகள், அச்சுப்பொறிகள், சேமிப்பகங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 2.4 | அலுவலக தளபாடங்கள் (மரம் / உருக்கு) திருத்தவேலைகள் |
| 2.5 | சாவி வெட்டுதல் மற்றும் பூட்டுகளின் திருத்தவேலைகள் |
| **3.** | **மோட்டார் வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்களின் திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல்** |
| 3.1 | இலகுரக வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள் மற்றும் பெட்டறிகள் |
| 3.2 | இலகுரக வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 3.3 | சைலன்சர், ரேடியேட்டர்கள், மோட்டார் வாகன காற்றுச்சீராக்கி திருத்தவேலைகள் |
| 3.4 | வாகன அப்ஹோஸ்டரி வேலைகள் (வாகன சீட் குஷன், சீட் கவர்கள், இறப்பர் கார்பட் மற்றும் கென்வஸ் உறைகள்) |
| 3.5 | வாகன சேர்விஸ்கள் |
| 3.6 | சக்கர சமநிலைப்படுத்தல் மற்றும் சீராக்கங்கள் |
| 3.7 | வாகன மின் திருத்தவேலைகள் |
| 3.8 | மோட்டார் வாகன தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் |
| 3.9 | மோட்டார் வாகன திருத்தவேலைகள் |
| **4.** | **அச்சிடல் நடவடிக்கைகள் மற்றும் விளம்பர வேலைகள்** |
| 4.1 | வரைதல் வேலைகள், வடிவமைப்பு வேலைகள் மற்றும் விளம்பரம் |
| 4.2 | அலுவலக ஆவணங்கள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் போன்றன |
| 4.3. | சஞ்சிகைகள், சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள் / வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை வடிவமைத்தல் மற்றும் அச்சிடல் (உள்நாட்டு/வெளிநாட்டு) |
| 4.4. | அச்சு வேலைகள் / புத்தகம் கட்டுதல் (புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், சுவரொட்டிகள்) |
| **5.** | **சேவைகள்** |
| 5.1 | பாதுகாப்பு சேவைகள் |
| 5.2 | அலுவலக பகுதிபிரிப்புகள், உள்ளக அலங்காரங்கள் மற்றும் நிர்மாணங்கள் |
| 5.3 | மின்சார மற்றும் தொலைபேசி கம்பியிணைப்புகள் |
| 5.4 | கணனி வலையமைப்புக்கான கம்பியிணைப்பு மற்றும் பராமரிப்பு |
| 5.5 | கற்புல / செவிப்புல ஆவணப் படங்களைத் தயாரித்தல் |
| 5.6 | கண்காட்சி / கருத்தரங்குகள் / செயலமர்வுகளுக்கான ஒலியமைப்பு |
| 5.7 | கட்டிடங்கள் / கண்காட்சிக்கூடங்களுக்கான ஒளியமைப்புகள் |
| 5.8 | போக்குவரத்துச் சேவைகள், வாடகை அடிப்படையிலான மோட்டார் வாகனங்கள் (கார், வேன், பஸ் போன்றன) |
| 5.9 | நிகழ்வு முகாமைத்துவம் / உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் |
| 5.10 | மென்பொருள் தீர்வு வழங்குநர்கள் |
| 5.11 | போக்குவரத்தாளர்கள் - வான், கடல் மற்றும் தூதஞ்சல் சேவைகள் |
| 5.12 | மொழிபெயர்ப்புகள் (ஆங்கிலத்தை தமிழுக்கு, ஜப்பான், சீன மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளுக்கு) |
| 5.13 | தரைவிரிப்புகள் மற்றும் கதிரைகளை ஷம்புவிட்டு கழுவுதல் |
| 5.14 | பீடைக் கட்டுப்பாடு |

**விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முறை**

2017ஆம் வருடத்திற்காக ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் 500.00 ரூபா மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரரினால் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் காசாளருக்கு இதை ரொக்கப் பணமாகவோ அல்லது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெயரில் வரையப்பட்ட காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு / காசோலையை விண்ணபத்துடன் இணைத்து 2017ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2016 ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர் / பிரதான நிறைவேற்றுநர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, NDB-EDB கட்டிடம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து கையளிக்கலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவை விடயங்களுக்காக பதிவு செய்து கொள்ள உத்தேசிப்பவர்கள் ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் ஒரே முறையில் பணத்தைச் செலுத்தி ஒரே விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். பூரணமற்ற மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை www.srilankabusiness.com எனும் எமது இணைய தளத்திற்கு பிரவேசித்து "Announcements" கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / சேவை வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் தேவைப்பாட்டிற்கு அமைய பதிவு செய்யப்படாத வழங்குநர்கள் / சேவை வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரல் மற்றும் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 2300702 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிரதிப் பணிப்பாளர் / வழங்கல்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.


**தலைவர் / பிரதான நிறைவேற்றுநர்,**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**

**NDB-EDB கட்டிடம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**

**தொலைபேசி: 011-2300705-11 தொலைநகல்: 011 2300715**

**இணையதளம்: www.srilankabusiness.com**